# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed - Multidisilinary Journal )
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:6 Issue :24 October 2024
கோட்டை:6 வாயில்:24 அக்டோபர் 2024

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

International e Journal of Tamil Research



## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

---

**நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்**

**இதழாக்கம்**

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

**முதன்மை ஆசிரியர்**

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**


**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com

---

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



# அகத்தினுள்


**இனவரைவியல் பார்வையில் — சங்க இலக்கியத்தில் மணத்துணையைத் தேர்ந்தெடுக்கும் முறைகள்**
இரா.பிரதீப் ராஜ்

**திணைக்கோட்பாட்டு அடிப்படையில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்**
முனைவர் இரா. யசோதா

**ஈரடி, நான்கடி காட்டும் பிறன்மனை நயவாமை என்னும் பேராண்மை**
மு.கயல்விழி

**காலனிய நீக்கமும் தமிழின் உள்முரண் களைவும்**
முனைவர் க. ஜவகர்

**இமயத்தின் செடல் கதாப்பாத்திரம்**
ஓர் ஆய்வு - ரா.சந்தியா

**விளக்கு பண்பாடு "சாவா மூவா பேராடு"**
கோ. அசோகன்

**காவல்கோட்டம் நாவலின் வழி தாதனூர் மக்களின் வாழ்வியல்**
க.பிரியா

**சோ. தர்மன் படைப்புகளும் அந்நியமாதலும்**
மு.முத்துமாரி

**நாட்டுப்புற மருத்துவம் சார் கலைச்சொற்கள்**
கு.வருதராஜ்

**திருமங்கை ஆழ்வார்ப் பாடிய திருப்புல்லாணித் திருத்தலம்**
முனைவர் ஆ. கவிதாராணி

**கதை பேசும் ஆடல் கலையான கதகளி**
கலாநிதி தாக் ஷாயினி பரமதேவன்

**நெடுங்கல்: பண்டைய தமிழ்ச் சமூகத்தின் பெருங்கற்கால பண்பாடும்**
மு.சத்தியா



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி

# அகத்தினுள்


இடுதுளை உருவாக்கத்தின் நோக்கம் மற்றும் வளர்ச்சி
அ.சகாய ஜெசிகலா

பெண்களின் வஞ்சினம் — இலக்கியம் மற்றும் கல்வெட்டு முன்வைத்து
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

சோழர்கால கலைப்படைப்பில் திருவேள்விக்குடி கோயில்
ச.பாப்பாசெல்வம்

சம்புவராயர்களின் ஆட்சியும் மாட்சியும்
முனைவர். அ. அமுல்ராஜ்

Exploring the Dynamics of Tourism Planning
S.John Abraham

Exploration of French Colonial Era Paintings in the Puducherry Government Museum
Gayathry. D

Revolutionizing Data Security and Privacy in Fintech with Blockchain and Cryptocurrencies
P.M.Shiyana.

மக்கள் பாடகர்களின் சமூக நிலை
வ.விக்டர்

இசையும் சமூக விமர்சனமும்
வ.விக்டர்

Mridanga Cintamanih": Exploration of its Impact on Carnatic Music and Education
V. Vijay Arun

Study of Techniques used while adapting popular Western Instruments to perform Carnatic Music
V. Vijay Arun

மேற்கத்திய செவ்விசை வடிவங்களின் பரிணாமம்
ச.ஜெயப்பிரகாஷ்.



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி



# இசை

# மேற்கத்திய செவ்விசை வடிவங்களின் பரிணாமம்

# *The Evolution of Western Classical Music forms*

**ஆய்வாளர் விவரம்** : ச.ஜெயப்பிரகாஷ்
முனைவர் பட்ட மாணவர்
TDES — தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**நெறியாளர் விவரம்** : முனைவர் ந. ஜெயவித்யா
உதவிப்பேராசிரியர்
திருச்சிராப்பள்ளி மறை மாவட்ட
கல்விச் சங்கம், திருச்சி.

**ஆய்வுச் சுருக்கம்**

மேற்கத்திய செவ்விசை வளர்ச்சியடைந்த பல்வேறு காலகட்டங்களில் பல இசை வடிவங்கள் தோன்றி படிப்படியாக வளர்ச்சியடைந்துள்ளது. மேற்கத்திய செவ்விசை முறையானது உலக மக்கள் அனைவராலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு இசையாக உருவாவதற்கு பல்வேறு இசை வடிவங்களை இசை வல்லுநர்கள் உலகுக்கு நல்கியுள்ளனர் என்பதை மேற்கத்திய செவ்விசையின் பல்வேறு இசை வடிவங்களை ஆய்வு செய்த பொழுது அறிய இயலுகிறது. இவ்வாய்வானது மேற்கத்திய செவ்விசை வடிவங்களின் பல்வேறு பரிணாமங்களை தெளிவாக விளக்குவதாக அமைந்துள்ளது.

***Synopsis:***

*During the development of Western Classical Music, it has taken many forms and has gradually developed. The practice of Western Classical Music has been globally recognized by people of all sorts and has been largely contributed by various composers thus helping it become a very formidable form of Music today. On my research of the various forms of western classical music, I have understood the evolution, growth, various intricate structures showing how paramount the form of western classical music has come to be.*

**திறவுச் சொற்கள்:**

மிடில் ஏஜஸ் அல்லது மேடிவல் காலம், ரினைசன்ஸ் காலம், பாரோக் காலம், கிளாசிக்கல் காலம், ரொமான்டிக் காலம் நவீன காலம்.

***Key words:***

*Middle Ages or Medieval period, Renaisance Period, Baroque Period, classical Period, Romantic Period, Modern Period.*

**முன்னுரை:**

மேற்கத்திய செவ்விசையானது மிடில் ஏஜஸ் அல்லது மேடிவல் காலம் முதல் நவீன காலம் வரை பல்வேறு இசை வடிவங்களுடன் படிப்படியாக பரிணாம வளர்ச்சியடைந்து ஒழுங்கமைவுடன் உலக இசையில் ஓர் உன்னதமான இடத்தை உலக மக்கள் ஏற்றுக்; கொள்ளும் விதத்தினை அடைந்துள்ளதை இவ்வாய்வின் வாயிலாக அறிந்து கொள்ள இயலும்.

**மேற்கத்திய செவ்விசை வடிவங்களின் பரிணாமம்:**

மேற்கத்திய செவ்விசை வடிவங்களின் பரிணாமம் என்பது பண்டைய காலம் (பண்டைய மெசபடோமியா, பண்டைய கிரேக்கம், பண்டைய ரோம்), பைபிள் காலம், என்ற காலங்கள் முதல் மேடிவல் காலம், ரினைசன்ஸ் காலம், பாரோக் காலம், கிளாசிக்கல் காலம், பாரோக் காலம், கிளாசிக்கல் காலம், ரொமான்டிக் காலம் மற்றும் நவீன காலம் போன்ற கால கட்டங்களில் வளர்ச்சியடைந்துள்ளது. அதில் குறிப்பாக மேடிவால் காலம், ரினைசன்ஸ் காலம், பாரோக் காலம், கிளாசிக்கல் காலம், ரொமான்டிக் காலம் மற்றும் நவீன காலங்களில் உருவான இசை வடிவங்ள் காகிதங்களில் அச்சிடிக்கப்பட்ட இசைப் பெட்டகங்களாக மக்கள் பயனபடுத்தும் விதத்ததில் இருந்து வருகின்றன. அவற்றில் சில இசை வடிவங்களை இவ்வாய்வில் காணலாம்.

**மிடில் ஏஜஸ் அல்லது மேடிவல் கால இசை வடிவங்கள்:**

மேடிவல் கால இசை வடிவங்கள் எனப்படுபவை பதிவு செய்யப்பட்ட துவக்க கால இசை வடிவங்களாகும். இக்கால கட்டத்தில் நியூம்ஸ் (Neumes) என்ப்படுகின்ற இசைக்குறியீடகள் வளர்ச்சியடைந்தன. மோனோபொனிக் சேன்ட் (மந்திரம்) இசை வடிவங்கள் அனைத்தும் நியூம்ஸ் இசைக்குறியீட்டில் எழுதப்பட்டுள்ளன. இவ்விசை வடிவ இசைக்குறியீடுகள் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மேடிவல் காலத்திற்கு முன்பாக இருந்த இசை வடிவங்கள் காகிதங்களில் அச்சேறாமல் இருந்துள்ளதை இசை ஆய்வு நூல்கள் வாயிலாக அறிய முடிந்தது. மேடிவல்; கால இசை வடிவங்களாக கருதப்படுப்பவை குறிப்பாக மோனோபொனிக் சேன்ட், ஓல்ட் ரோமன் சேனட், கிரிகோரியன் சேன்ட், பைசேன்டியன் சேன்ட், அம்ரோசியன் சேன்ட், மொசாரபிக் சேன்ட், கலிக்கன் சேன்ட், சரும் சேன்ட், மோடெட், ஆர்கனம் (ஹெட்ரோபொனிக், பாலிபொனிக்), கண்டக்டஸ் கேன்சோ, பாலட் (ballade), ரோன்டிவ் (Rondeau) மின்னிசேங் பாடல்கள் (Minnesang), வெரிலாய் (Virelai), எஸ்தாம்பி (Estatmpie) டிரவ்விரே மற்றும் டிபோடர்ஸ் பாடல்கள், கேன்டிகா (Candiga) லாடே (Laude) என்பவையாகும்.

**ஓல்ட் ரோமன் சேன்ட் (பழைய ரோம மந்திரம்):**

பழைய ரோம மந்திர இசை வடிவமானது கிரிகோரியன் சேன்ட் பரவுவதற்கு முன்பு ரோம ஆலயங்களில் தத்தெடுத்து பயன்படுத்தப்பட்ட ஓர் இசை வடிவம். இது முந்தைய மேடிவல் கால ரோமில் இசை பாரம்பரியத்தில் சிறப்புமிக்க நுண்ணறிவை வழங்கி மேற்கத்திய வழிபாட்டு இசை பரிணாம வளர்ச்சியடைவதற்கு உதவியாக இருந்துள்ளது. இவ் வழிபாட்டு முறை கிழக்கத்திய ஆலயங்களிலிருந்து மாறுபட்டு காணப்பட்டது. இவ்வழிபாட்டு மந்திரம் உரையுடன் மாஸ்(தொழுகை) மற்றும் புனித அலுவலக வழிபாட்டு சடங்குகளின் தனித்தன்மையான அமைப்புடன் வளர்ச்சியடைந்துள்ளது. இம் மந்திரத்தின் தாக்கம் அம்ரோசியன் மற்றும் கலிக்கன் சடங்குகளிலும் செல்வாக்கு பெற்றள்ளது. இவை ஒற்றை ஸ்வர இன்னிசை மாதிரி அமைப்பும் தாள அளவீடற்ற லத்தீன் உரையுடன் காணப்படுகிறது. துவக்க காலத்தில் இம் மந்திரம் வாய் வழியில் பாடி ஒருவரிடமிருந்து மற்றவருக்கு பரப்பட்டுள்ளது பின்னர் நியூம்ஸ் இசைக்குறியீடுகளுடன் மந்திர பாரம்பரியமாக கடத்தப்பட்டுள்ளது. கிரிகோரியன் சேன்ட் தரப்படுத்தப்பட்டவுடன் கரோலிங்கன் பேரரசு முழுவதும் பரவிவிட்டது. பழைய ரோம மந்திரம் தொடர்ந்து ரோம் மற்றும் சுற்றியுள்ள நாடுகளில் பயன்படுத்தப்பட்டது. இறுதியில் போப் பாண்டவரின் துணையுடன் கரோலிங்கன் ஆட்சியாளர்கள் கிறிஸ்தவ ஆலயங்களில் பழைய ரோம மந்திரத்தை நிறுத்திவிட்டு கிரிகோரியன் மந்திரத்தை புழக்கப்படுத்திவிட்டனர். பழைய ரோம மந்திரத்தின் மாஸ் மற்றும் புனித அலுவலகத்தில் பயன்படுத்தப்பட்டு கோடக்ஸ் HF மற்றும் கோடக்ஸ் H ஆகியவை இன்றும் பாதுகாக்கப்பட்டு

வருகின்றன. கிரிகோரியன் சேன்ட்டில் பழைய ரோம மந்திரத்தின் இன்னிசை மற்றும் அமைப்பு கூறுகள் மாற்றப்பட்டு பயன்படுத்தப்பட்டது. மேற்கத்திய வழிபாட்டு மந்திரங்களின் (Western Plain Chart) வளர்ச்சியில் செல்வாக்கு பெற்றுள்ளது. சில பழைய ரோம மந்திரத்தின் இன்னிசை காரணிகளை மேற்கத்திய கிறிஸ்துவ வழிபாட்டு இசையில் காண முடியும். துவக்க மேடிவல் கால கிறிஸ்துவ ஆராதனை நடைமுறைகளின் பன்முகத்தன்மையில் பழைய ரோம மந்திரத்தின் பிரதிநிதித்துவம் இருப்பதை கிறிஸ்தவ ஆலய வழிபாடுகளில் காணலாம். துவக்க மேடிவல் கால ரோமின் பழைய ரோம மந்திரம் மேற்கத்திய வழிபாட்டு இசையின் வளாச்சியில் கிரிகோரியன் சேன்ட்டிற்கு முன்பாக முக்கியமாக இடத்தை துவக்க கால கிறிஸ்தவ இசை பாரம்பரியத்தில் பெறுகிறது என்பவை போன்ற தகவல்கள் இசை வரலாற்று மற்றும் ஆய்வு நூல்களை ஆய்வு செய்த பொழுது அறிய முடிந்தது.

**கிரிகோரியன் சேன்ட்:**

ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் லத்தீன் மொழியில் இயற்றப்பட்ட ஒற்றை இன்னிசை (மோனோபொனிக் சேன்ட்) மந்திர தொகுப்பாகும். கி.பி.6-ம் நூற்றாண்டில் கத்தோலிக்க திருச்சபைகளின் போப்பாக செயின்ட் கிரிகோரி 3 செப்டம்பர் 590 முதல் 12 மார்ச் 604 வரை பணியாற்றினார். இவர் மேற்கத்திய செவ்விசை வளர்ச்சியின் துவக்க காலகட்டத்தில் முக்கிய பங்காற்றியவர். இவர் போப்பாக பதவி வகித்தவுடன் கத்தோலிக்க ஆலயங்களில் ஆராதனை செய்வதற்கென இசை வல்லுநர்கள் மற்றும் பாடல் ஆசிரியர்களைக் கொண்ட குழு அமைத்து இசைப் பாடல்களை இசைக்கூறுகள் மூலம் கோர்வையாக நூல் வெளியிட்டுள்ளார். இதுவே கிரிகோரியன் சேன்ட் எனப்படுகிறது. இது குரலிசைக்கு மட்டுமேயான இசைக்குறியீடு கொண்ட இசைப்பெட்டகம். 6-ஆம் நூற்றாண்டில் துவங்கப்பட்ட இப்பணி மேற்கத்திய மற்றும் மத்திய ஐரோப்பிய நாடுகளிலிருந்து 10-ஆம் நூற்றாண்டிற்குள் ஐரோப்பிய நாடுகளிலுள்ள கத்தோலிக்க திருச்சபைகளில் முழுவதுமாக பரவி வழக்கில் வந்துவிட்டது.

**பைசான்டைன் சேன்ட்:**

பைசாண்டைன் பேரரசின் நீதிமன்ற மற்றும் மதச் சடங்குகளுக்காக இயற்றப்பட்ட பாடல்களை கொண்ட இசை தொகுப்பு பைசாண்டைன் சேன்ட் என அழைக்கப்படுகிறது. கிழக்கு ஐரோப்பிய ஆர்த்தடாக்ஸ் ஆலய வழிபாட்டு முறைகளில் பைசாண்டைன் சான்ட் இன்றும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஏனென்றால் வெவ்வேறு ஆர்த்தடாக்ஸ் மரபுகள் பைசாண்டைன் சேன்ட் இசையின் பாரம்பரியத்தை இன்னும் அடையாளம் கண்டுகொள்கின்றன. கான்ஸ்டான்டினோப்பிளின் வீழ்ச்சிக்கு பிறகும் பைசாண்டைன் இசை மறைந்துவிடவில்லை. கிழக்கத்திய நாடுகளான அலெக்ஸாண்டிரியா, ஆன்டியோக், பல்கேரியா, கான்ஸ்டாண்டினோப்பிள், கிரீஸ், ஜெருசலேம், மற்றும் ரோமானியாவிலிருந்து துவங்கி கிழக்கத்திய மற்றும் இதர ஆர்தொடக்ஸ் ஆலயங்களில் பைசாண்டைன் சேன்ட் இசை பாரம்பரியமாக இன்றும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை இசை ஆய்வு நூல்கள் வாயிலாக அறிய முடிந்தது. முதலாம் கான்ஸ்டன்டைன் (306-337) கான்ஸ்டான்டினோப்பிளை தலைநகராக கொண்டு பைசாந்திய பேரரசை நிறுவினார். இது கிழக்கு ரோமப் பேரரசு என அழைக்கப்படுவதும் உண்டு. 285-ம் ஆண்டில் பேரரசர் டியோகிளீசியன் (ஆட்சிக் காலம் 284-365) ரோமப் பேரரசின் நிர்வாகத்தை கிழக்குப் பகுதி, மேற்குப் பகுதி என இரண்டு பகுதிகளாக பிரித்தார். பைசான்டைன் இசை முறையானது நியூம்ஸ் இசைக்குறியீடுகளால் எழுதப்பட்டுள்ளது.

**மோடெட்:**

மிடில் ஏஜஸ் காலத்தில் உருவான மிகவும் முக்கியமான பாலிபொனிக் குரலிசை வடிவமாக மோடெட் இசை வடிவம் கருதப்படுகிறது. மிடில் ஏஜஸ் காலந்தொட்டு மோடெட் இசை வடிவமானது பரிணாம வளர்ச்சியடைந்து தற்காலம் வரை ஒரு உன்னதமான இடத்தை

அடைந்துள்ளது. மோடெட் இசை வடிவமானது துவக்க காலத்தில் இலத்தீன் மொழிப் பாடல் வரிகளுடன் காணப்பட்டன. பின்னர் பல்வேறு மொழிகளும் பயன்படுத்தப்பட்டன. இவை கத்தோலிக்க கிறிஸ்துவ ஆலய வழிபாடுகளுக்குப் பயன்படுத்தப்பட்டன என்பதை இசை ஆய்வு நூல்கள் வாயிலாக அறிய முடிகிறது.

பாரிசிலுள்ள நோட்ரி டாம் பாலிபொனிக் இசைப் பள்ளி, காலந்தொட்டே இவ்விசை வடிவம் பிரபலமடைந்துவிட்டது. மோடெட் இசை என்பது ஆர்கனம் என்ற இசை வடிவத்தை தொடர்ந்து உருவான ஒரு இசை வடிவம், லியோனின், பெரோடின் போன்ற இசையமைப்பாளர்கள் மோடெட் இசை வடிவ வளர்ச்சிக்கு துவக்க கருவியாக இருந்துள்ளனர். மோடெட் இசை வடிவமானது பாலிடெக்சுவல் மோடெட் முறையிலும் அதாவது பல்வேறு சொற்றொடர்கள் கலந்தும் காணப்படுகின்றன. ஆர்ஸ் ஆன்டிக்குவ காலகட்டங்களில் (1170-1310) மோடெட் இசை மேலோங்கி காணப்பட்டன. பெரோடின் இசையமைத்த அலேலுயா நேட்டிவிட்டாஸ் இசை வடிவம் மொடெட் இசை வடிவமாக இருந்து வருகிறது. ஆர்ஸ் நோவா கால கட்டங்களிலும் (14-ம் நூற்றாண்டு) மோட்டெட் இசை வடிவம் சிறந்து விளங்கியது. பிலிப் டி விட்ரி (31 அக்டோபர் 1291—9 ஜீன் 1361), கிலாமே டி மாசெட் (1300-1377) போன்ற பிரெஞ்சு இசை வல்லுநர்கள் மேதிவாள் கால மோடெட் வளர்ச்சியில் பங்காற்றியுள்ளனர்;.

**ஆர்கனம்:**

மேற்கத்திய செவ்விசையின் துவக்க கால பாலிபொனிக் (கூட்டு) குரல் இசை வடிவம் ஆர்கனம் என அழைக்கப்படுகிறது. இவ்விசை வடிவம் 9-ஆம் நூற்றாண்டிலிருந்து வளர்ச்சியடைந்து 13-ம் நூற்றாண்டு மற்றும் 14-ம் நூற்றாண்டின் துவக்கம் வரை பிரபலமடைந்து காணப்பட்டது. ஆர்கனம் இசை வடிவம் பேரரல் ஆர்கனம், ப்ரி ஆர்கனம், மெலிஸ்மேட்டிக் ஆர்கனம், டிஸ்கன்ட் ஆர்கனம் என நான்கு வடிவங்களில் காணப்பட்டன. பேரரல் ஆர்கனத்தில் இணையான ஸ்வர நகர்வு மற்றும் நான்காவது அல்லது ஐந்தாவது ஸ்வர நகர்வு இருப்பதை காண முடிகிறது. ப்ரி ஆர்கனத்தில் எதிர்எதிர், இணையான மற்றும் சாய்ந்த ஸ்வர நகர்வு இருப்பதை காணலாம். மெலிஸ்மேட்டிக் ஆர்கனத்தில் நிலையான, பல மற்றும் அலங்கார ஸ்வரங்களின் நகர்வுகளை காண முடிகிறது. லியோனின் மற்றும் பெரோடினின் ஆர்கனத்தில் இம்முறை அதிகமாக உள்ளது. டிஸ்கன்ட் ஆர்கனத்தில் ஸ்வர நகர்வுகள் தாளக்கட்டுடனும் பாடக்குறிப்புடனும் இருப்பதை காண முடிகிறது. பெரேடினின் ஆர்கனம் இசையமைப்புகளில் (விடர்ன்ட் ஆம்னஸ்) இம்முறையை அதிகமாக காண முடிகிறது என்பதை இசை ஆய்வு நூல்கள் உணர்த்துகின்றன.

**கன்டக்ட்டஸ் (Conductus):**

கன்டக்ட்டஸ் இசை வடிவமானது மேதிவாள் கால தனித்துவமான இசை வகையை சார்ந்தது இவ்விசை வகையானது 12 மற்றும் 13-ம் நூற்றாண்டுகளில் பிரான்சில் பரவி காணப்பட்டது. குறிப்பாக பெரோடின் மற்றும் லியோனின் போன்ற இசை வல்லுநர்கள் வாழ்ந்த பாரிஸில் மேலோங்கி இருந்தது. இவ்விசை வடிவம் 12-ஆம் நூற்றாண்டில் உருவான ஒரு புதுமையான மேற்கத்திய செவ்விசை வடிவமாக கருதப்படுகிறது. முந்தைய பாலிபொனிக் இசை வடிவமான ஆர்கனம் இசை வடிவம் போன்ற முக்கியமான ஒன்றாகும். இது மேனோபொனிக் மந்திர பாடலிலிருந்து அதிக சிக்கலான பாலிபொனிக் அமைப்பை கொண்டது. பிரான்சின் பாரிசில் வாழ்ந்த இசைவல்லுநர்களான லியோனின், பெரோடின் ஆகியோர் துவக்க கால பாலிபொனிக் இசை போன்ற மேம்பட்ட வடிவத்தின் வளர்ச்சிக்கு ஒரு கருவியாக இருந்தது போல கன்டக்டஸ் இசை வடிவத்திற்கும் கருவியாக இருந்துள்ளனர். இக்காலக்கட்டத்தில் தோன்றிய இசை வடிவங்கள் ஆலயங்களின் வழிபாட்டு மற்றும் சடங்குகளுடன் ஒருங்கிணைந்து காணப்பட்டன.

கன்டக்டஸ் இசை வடிவ பாடல்களை புனித தன்மையுடனும், இசை கட்டமைப்புடனும், கவித்துவ வடிவுடனும் நினைவில் நிற்கும் படியாக நிகழ்த்தப்பட்டுள்ளது என்பதை இசை ஆய்வு நூல்களை ஆராயும் பொழுது அறிய முடிகிறது. இதன் வரலாற்று ரீதியான வளர்ச்சியென்பது 1. முந்தைய கன்டக்டஸ் (12-ம் நூற்றாண்டு) 2. முதிர்ந்த கன்டக்டஸ் (13-ம் நூற்றாண்டு) 3. இசைத் தொகுப்பு மற்றும் இசையமைப்பாளர்களின் காலம் என கூறப்படுகிறது. இதில் குறிப்பாக லியோனின் மற்றும் பெரோடின் போன்ற இசை வல்லுநர்கள் இவ்விசை வடிவத்தினை பிரபலபடுத்தியதில் முக்கிய பங்காற்றியுள்ளனர். இதில் குறிப்பிடும் படியான இசையமைப்புகளாக "ஆவே விர்கோ விர்ஜினம் மற்றும் வெர்பும் போனம் எட் சுவே" போன்றவை கருதப்படுகின்றன. இவைகளின் கவிதை நடை மற்றும் மெட்டமைப்பு தன்மைகள் கன்டக்டஸ் இசை வடிவத்தினை காட்சிபடுத்துகின்றன. இவ்விசை வடிவத்தின் துவக்க கால பாடல்கள் லத்தின் மொழியிலும் பின்னர் பண்டைய பிரென்சு மொழியிலும் (தெற்கு பிரான்ஸ்) எழுதப்பட்டுள்ளன. கன்டக்டஸ் இசைவடிவமானது மோனோபொனிக் மந்திரத்திற்கும் சிக்கலான பாலிபொனிக் இசை வடிவத்திற்கும் ஒரு பாலமாக அமைந்து மேதிவாள் மற்றும் ரினைசன்ஸ் கால கட்டத்தில் பிரபலமாக இருந்துள்ளன.

**ரினைசன்ஸ் கால மேற்கத்திய செவ்விசை வடிவங்கள்:**

14 ஆம் நூற்றாண்டிலிருந்து 17 ஆம் நூற்றாண்டு வரை ரினைசன்ஸ் கால மேற்கத்திய இசை பரந்துவிரிந்து பல்வேறு இசைவடிவங்கள் மற்றும் வகைகளாக செழித்துள்ளது. இக்காலகட்டத்தில் குறிப்பாக உறார்மொனி, கவுண்டர்பாயின்ட், இசைக்குறியீடுகள் புனித மற்றும் மதசார்பற்ற இசைகளாக வளர்ச்சியடைந்துள்ளன என்பதை இசை வரலாற்று மற்றும் ஆய்வு நூல்களை ஆய்வு செய்த பொழுது நன்கு அறிய முடிந்தது. ரினைசன்ஸ் காலகட்டத்தில் தோன்றிய முக்கியமான இசை வடிவங்களாக:

**புனித இசை வடிவங்கள்:** 1மாஸ் 2. மோடெட் 3. கோரல்,

**மதசார்பற்ற இசை வடிவங்கள்:** 1.மேடிரிக்கல், 2. சேன்சன், 3. பீரோடொலா

**கருவிசை வடிவங்கள்:** 1.ரைசர்கார் 2. கேன்சொனா 3. நடன இசை மற்றும்

**இதர வடிவங்கள்:** 1.லூட் பாடல்கள் (Ayze) 2. விலான்சிகோ போன்றவற்றை குறிப்பிடலாம்.

**மாஸ் (Mass)**

கிறிஸ்தவ இசை பாரம்பரியத்தில் மாஸ் எனப்படும் இசை வடிவமானது மத்திய வழிபாட்டு இசை முறையாக குறிப்பாக மேற்கத்திய இசையில் செல்வாக்கு பெற்றிருந்தது மாஸ் இசை வடிவத்தின் வேரானது இயேசு கிறஸ்து தனது சீடர்களுக்கு வழங்கிய கடைசி இரவு விருந்தினை (LAST SUPPER) மையமாக கொண்டது. இது தான் முதல் நற்கருணை கொண்டாட்டமாக கருதப்படுகிறது. துவக்க கால கிறிஸ்தவ சமூகங்கள் நற்கருணை கொண்டாட்டங்களை தங்களுடைய வீடுகள், பின்னர் ஆலய கட்டிடங்களில் தொடர் கூடுகைகளில் வசனங்கள் வாசிப்பது, தொழுகை, கீர்த்தனைகள் பாடுவது, பிரார்த்தனைகள் செய்வது என துவங்கினர். இதுவே மாஸ் இசை வடிவத்தின் துவக்க காலமாக கருதப்படுகிறது. 4-ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவம் ரோமப் பேரரசின் அங்கீகரிகக்ப்பட்ட மதமாக அறிவிக்கப்பட்டு உருவாகியது. மாஸ் இசை வடிவம் வழிபாட்டு இசை பயிற்சியாக ஆலய பாதிரியார்கள் மற்றும் பலதரப்பட்ட கிறிஸ்தவ சமூகங்கள் வாயிலாக வழிபாட்டு பாரம்பரியமாக செல்வாக்கு பெற்றது. மேற்கத்திய கிறிஸ்தவத்தில் ரோமச் சடங்குகள் கிறிஸ்தவ வழிபாட்டு பாரம்பரியமாக உருமாறி ஆதிக்கம் பெற்றது. மேடிவாள் காலத்தில் போர் கிரிகோரி — ஐ (590-604) ஆல் வடிவமைக்கப்பட்ட கிரிகோரியன் சேன்ட் 6 மற்றும் 7 ஆம் வழிபாட்டு பாடல் நூற்றாண்டுகளில் தரநிலையுடைய

வழிபாட்டு பாடல் இசை வடிவமாக மாறி மாஸ் இசை வடிவ வளர்ச்சிக்கு வித்திட்டது. கிரிகோரியன் சேன்டின் இன்னிசை வடிவம் ஒற்றை ஸ்வர (மோனோபொனிக்) இன்னிசையுடன் மாஸ் இசை வடிவில் பல பகுதிகளில் பாடப்படுவது. பிரான்சின் நோட்ரி டாம் பள்ளியிலிருந்த லியோனின், பெரோடின் போன்ற இசையமைப்பாளர்கள் பாலிபொனிக் இசை வடிவத்தின் மூலமாக கடினமான மற்றும் அலங்களரிக்கப்பட்ட ஒழுங்கு அமைப்புடைய இசை காணப்பட்டது. அவையாவன (கைரி) Kyrie குளேரியா (Gloria), கிரிடோ (Credo), சேங்டஸ் (Sanctus) மற்றும் ஆக்னஸ் டி (Agnus Dei)இ கிலாமே டி மாசடெ; என்ற இசையமைப்பாளர் உருவாக்கிய மெசெ டி நோட்ரி டேம் (ஊசா1360) என்ற மாஸ் வடிவ மேற்கத்திய இசை வளர்ச்சியில் முக்கயமான ஒன்றாக கருதப்படுகிறது. 15,16 ஆம் நூற்றாண்டுகளில் ஜோஸ்குயின் டெஸ் பிரஸ், பாலஸ்டிரினா (போப் மார்செல்லஸ் மாஸ்(1562") ஓர்லான்டோ டி லஸோ போன் இசை வல்லுநர்களும் மாஸ் இசை வடிவத்தில் இசையமைத்துள்ளனர். பாரோக் காலகட்டத்தில் ஜே.எஸ்.பாக் மற்றும் ஜார்ஜ் பிரடெரிக் ஹேன்டல், கிளாசிக்கல் காலகட்டத்தில் ஜோசப் ஹைடன் மற்றும் டெம்சார்ட், ரோமேன்டிக் காலகட்டத்தில் பீத்தோவன் மற்றும் பிரான்ஸ் சூபர்ட், 20 ஆம் நூற்றாண்டு காலகட்டத்தில் இகர் ஸ்ட்;ராவின்ஸ்கி, லியோனார்டு பெர்ஸ்டெயின் போன்ற இசையமைப்பாளர்கள் மாஸ் இசை வடிவ இசையமைப்புகளை மேற்கத்திய இசைக்கு வழங்கியுள்ளனர்.

**கோரல்:**

16 ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவ மதத்தில் மார்டின் லுதரால் (10Nov 1483-18 Feb1546) ஏற்பட்டு லுத்தரனிசம் வளர்ச்சியடைந்தது. இக்காலகட்டத்தில் மேற்கத்திய செவ்விசையில் புரொட்டஸ்டன்ட் பாரம்பரியத்துடன் (ரோமன் கத்தோலிக்க பாரம்பரியத்துக்கு எதிரான பாரம்பரியம்) கோரல் என்ற முக்கியமான பாடல் இசை (Hymn tune) வடிவ பாரம்பரியம் வளர்ச்சியடைந்தது. மார்டின் லூதர் மொழி கத்தோலிக்க வழிபாட்டிற்கு வலியுறுத்தினர். மார்டின் லூதரும் வளமான பாடல் (Hymn ) எழுதும் திறன் படைத்தவராதலால் முன்பிருந்த இன்னிசை வடிவங்களான கிரிகோரியன் மந்திரம் மற்றும் இதர பிரபலமான இன்னிசைகளை பின்பற்றி பாடல்களை எழுதி அவை கோரல் இசை வடிவமாக மாற்றுவதில் அரும்பாடுபட்டார். இறையியல் உண்மைகளை சொல்ல சபைக்குரிய ஆராதனைகளில் இசையை ஒரு பலமான ஆயுதமாக நம்பினார். இதுவே பல கோரல் இசை வடிவம் உருவாக காரணமாக அமைந்தது. கோரல் இசை வடிவ பாடலக்ள வேதாகம கருத்துக்கள், பழிபாட்டு உரைகள் மற்றும் புதிய இசையியல் தத்துவங்களை மையமாக வைத்து எழுதப்பட்டு கிறித்தவ சமய சீர்திருத்தத்துடன் இணைக்கப்பட்டன. மார்டின் லூதரைப் போன்று பிலிப் நிக்கோலாய், பால் கெர்கர்ட் மற்றும் ஜான் வால்டர் போன்ற சீர்திருத்தவாதிகளுக்கு கோரல் இவை வடிவத்திற்கு அரும்பணியாற்றியுள்ளனர். பாரோக் காலகட்டத்தில் ஜோகன் செபஸ்டியன் பாக் (1685-1750) என்ற இசையமைப்பாளர் கோரல் இசையில் மிகவும் புகழ்மிக்க இசை வல்லுநராக கருதப்படுகிறார். ஜே.எஸ். பாக்ன் கோரல் இசை வடிவம் உயர்ந்த ஸ்வர ஒத்திசைவு (Harmonization) மற்றும் ஆழ்ந்த வெளிப்படுத்தும் தன்மையுடனும் காணப்படுகிறது. கிளாசிக்கல் மற்றும் ரொமேன்டிக் காலகட்டத்தில் பீத்தோவன், பெலிக்ஸ் மேன்டல்சன் மற்றும் ஜோகன்னஸ் பிராம்ஸ் ஆகிய இசையமைப்பாளர்களின் கோரல் இசை வடிவ இசையமைப்புள் மிகவும் பிரபலமானவை.

**பாரோக் கால இசை வடிவங்கள்:**

1600 ஆம் காலகட்டத்திலிருந்து 18 ஆம் நூற்றாண்டின் மத்திய காலகட்டம் (1750) வரையுள்ள காலகட்டம் பாரோக் காலம் என் மேற்கத்திய இசை வரலாற்றில் கூறப்படுகிறது. இக்காலகட்டம் மேற்கத்திய இசையில் மிகவும் செல்வாக்கு பெற்ற காலகட்டமாகும். புதிய

இசை வடிவங்கள், இசையின் பாணிகள், கருவியிசையின் எழுச்சி தொனி ஒத்திசைவின் (Jonal Harmony) நிறுவுதல் போன்ற மேற்கத்திய செவ்விசையின் வளர்ச்சி உச்சமடைந்த காலமாகும். இக்கால கட்டத்தில் பல்வேறு இசைவல்லுநர்கள் தோற்றி பல இசைவடிவங்களை மேற்கத்திய செவ்விசைக்கு நல்கியுள்ளனர் என்பதை இசை வரலாற்று மற்றும் ஆய்வு நூல்களை, ஆராய்ந்த பொழுது அறிய முடிந்தது. அவ்விசைவடிவங்கள் குரலிசை வடிவங்கள் ரன ஓப்ரா (Opera), ஒரடேரியோ, (Oratatrio), கேன்டாடா (cantata), பேஷன் (Passion)) எனவும் கருவியிசை வடிவங்களான கான்செர்டோ (concerto)), சூட் (Suite),) சொனாட்டா (Sonata), பியூக் (Fague), பிரிலூட் (Prelude) எனவும் குரலிசையும் கருவியிசையும் கலந்த இசை வடிவங்களான, கோரல் பிரிலூடு (Chorale predude), பிரெஞ்சு ஓவர்சர் (French overture) எனவும் காணப்படுகின்றன.

**ஓப்ரா (Opera)):**

ஓப்ரா இசைவடிவம் எனப்படுவது பாடல் கருவியிசை சில வேளைகளில் நடனம் மற்றும் அலங்கார உடையுடன் விரிவான மேடையில் நிகழ்த்தப்படும் இசை வடிவாகும். இது 16 ஆம் நூற்றாண்டில் இத்தாலியில் உருவான இசை வடிவம். இது மேற்கத்திய செவ்விசையில் முக்கியமான ஒரு இசை வடிவமும் என்பதை இசை ஆய்வின் மூலம் அறிய முடிந்தது. பழங்கால கிரேக்க நாடகங்கள் இதற்கு முன்னோடியாக கருதப்படுகிறது. மிடில் ஏஜஸ் காலகட்டத்தில் ஐரோப்பிய நாடுகளில் பைபிளில் காணப்படும் கதை நாடக வடிவிலும் பின்னர் புனித மற்றும் மதசார்பற்ற இசை நாடகங்களுக்கு நிகழ்த்தப்பட்டுள்ளன. 16 ஆம் நூற்றாண்டில் பிரான்சில் வாழ்ந்த சில அறிவு ஜீவி குழுக்கள், இசைவல்லுநர்கள் மற்றும் கவிஞர்கள் பண்டைய கிரேக்க இசை நாடகங்களை நிகழ்த்தியுள்ளனர். இதில் வினகேன்சோ கலிலோ (கலிலியோவின் தந்தை), கியூலியோ, காகினி, ஜாகோபோ பெரி போன்றோர் அடங்குவர், இவர்கள் புளோரன்டைன் (Florentine Camerata) கேமராடா என அழைக்கப்பட்டனர். ஜேகோடோ பெரி மற்று;ம் ஒட்டாவியோ ரினுச்சினி இணைந்து 1597 ஆம் ஆண்டில் உருவாக்கிய "டேப்ன்" (Dafene) என்ற ஓப்ரா முதல் ஓப்ராவாக கருதப்படுகிறது அது போல பெரியின் "யூரிடைஸ்" (நரசூனாநை -1600) ஓப்ராவும் உள்ளது. கிளாடியோ மான்வெர்டியின் "ல ஆர்போ" (L "Ofeo -1607) என்ற ஓப்ரா சிறந்த துவக்க கால ஓப்ராவாக கருதப்படுகிறது. 1643 ஆம் ஆண்டில் மான்டுவர்டி உருவாக்கியது. "ல இன்கொரேனாசியான் டி பாப்பியா (("L incoronozinore di poppea ") எனற் ஓப்பராவும் சிறந்த ஓப்ராவாகும். 17 ஆம் நூற்றாண்டில் இத்தாலியன் ஓப்ரா, பிரென்ஞ் ஓப்ரா, இங்கிலீஸ் ஓப்ரா போன்றவை வளர்ச்சியடைந்தன. 18 ஆம் நூற்றாண்டு மற்றும் கிளாசிக்கல் காலகட்டத்தில் பெர்கலசி மற்றும் மொசாட் போன்ற இசை வல்லுநர்களின் ஓப்ரா ப்பா(Opera buffa) காமிக் ஓப்ரா மற்றும் கிளாக்ன் ரீபார்ம் ஓப்ரா (Oppera Reform) போன்றவை வளர்ச்சியடைந்தன.

**ஒரடோரியோ (Oratoriao):**

ஒரடோரியா இசை வடிவம் என்பது பெரிய அளவிலான இசை சார்ந்த கருவியிசை, குழு பாடல் தனிப்பாடல் கலந்த இசை வடிவமாகும். ஓப்ரா இசை வடிவம் போன்றே கதை, நாடகத்தன்மை, இசைத்தன்மை உறுப்புகளுடைய இசை வடிவம் இதில் ஓப்ரா போன்று அலங்கார ஆடைகள், இயற்கைக் காட்சி மற்றும் நடிப்புகள் வெளிப்படுத்தப்படுவதில்லை. இவ்விசை வடிவத்தில் மதம் சார்ந்த கருத்துக்கள் அடிப்படையாகவும், சில வேளைகளில் மத சார்பற்ற கருத்துக்களும் நிகழ்த்தப்படுகின்றன. ஒரடோரியோ தோற்றம் என்பது மேடிவாள் கால வழிபாட்டு நாடகங்கள் மற்றும் ரினைசன்ஸ் கால மோடட் மற்றும் மேடிக்கல் ஆகிய இசை வடிவங்கள் ஒரடோரியோ வளர்;ச்சியி; பங்களித்துள்ளன. 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புனித பிலிப் நேரி(1515-1595) என்ற ரோமன் கத்தோலிக்க பாதிரியார் தான் இசையமைத்த ஒரடோரியா வை சபை

வழிபாட்டிற்கு முதன் முதலாக பயன்படுத்தியுள்ளார். 17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜியோகோமா கரிஸ்சிமி (1605-1674) உருவாக்கிய ''ஜெப்டே மற்றும் ஜோனஸ்'', ''டெஸ்Nஞh'', ஹிஸ்டாரிக்'' போன்ற ஒரடோரியாக்கள் துவக்க காலங்களில் நன் மதிப்பை பெற்றவை இவை தனிப்பாடலாக, குழு பாடலாக, இருவர் பாடலாக அமைந்துள்ளன. 17,18 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவின் பல நாடுகளில் குறிப்பாக ஜெர்மனி, பிரான்ஸ், ஆஸ்திரியா, இத்தாலி போன்ற நாடுகளில் பரவிவிட்டது. ஜெர்மனியின் ஹெயின்ரிச், சூட்ஸ் (1585-1672) ன் ஜெர்மன் ஒரடோரியோ, பிரான்சின் மார்க் ஆன்டொனி கார்பெனடர் ன் இலத்தீன் ஒரடோரியா, இத்தாலியின் அலெக்சாண்ட்ரோ ஸ்கார்லெட் (1660-1725)-ன் இத்தாலியன் ஒரடோரியா ஆகியவை ஒரடோரியா வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. 17ம் நூற்றாண்டின் இறுதி மற்றும் 18ம் நூற்றாண்டில் வாழ்ந்த இசை வல்லுநர்களான ஜோசப் பிரடெரிக் ஹாண்டல் (1685-1759) இசையமைத்த மேசாயா (1741), இஸ்ரோல் ன் எகிப்து (1739), ஜுடாஸ் மெக்காமஸ் (1747) மற்றும் ஜோகன் செபாஸ்டியன் பாக் (1685-1750) இசையமைத்த செயின் மேத்யூ பேசன்" (1727), கிறிஸ்மஸ் ஒரடோரியா (1734) போன்ற இசை வடிவங்கள் பைபிள் செய்திகளை, இசை உணர்வு வெளிப்பாடு நுணுக்கங்களுடன் மேற்கத்திய செவ்விசை வளர்ச்சியில் மிகவும் பங்களிப்பு செய்துள்ளன.

**கேன்டடா:**

கேன்;டடா இசை வடிவம் எனப்படுவது குரலிசையுடன் கருவியிசை துணையுடன் பல்வேறு இசை இயக்கங்களுடன் (Movements) பாடப்படும் இசையமைப்பாகும். துவக்க கால பாரோக் காலகட்டத்தில் புனித மற்றும் மதச்சார்பற்ற கருத்துக்களை மையமாகக் கொண்டு கேன்டடா இசை வடிவங்கள் எழுதப்பட்டுள்ளன. கேன்டடா என்ற சொல்லானது கேன்டேயர் என்ற இத்தாலியன் சொல்லிலிருந்து உருவானது. இதற்கு பாடுவது என்று பொருள். 17-ஆம் நூற்றாண்டு துவக்கத்தில் இவ்விசை வடிவம் வளர்ச்சியடைந்தது. கிளியோ காக்கின் என்ற (1551-1681) இசை வல்லுநரின் கேன்டடாக்கள் துவக்ககால கேன்டடா இசை வடிவங்களாக கருதப்படுகின்றன. கிளாடியோ மான்வெர்டி (1567-1643) என்ற இசை வல்லுநரின்; பாரோக் காலகட்டத்தில் ஒப்ரா, மேட்ரிகல்ஸ் மற்றும் கேன்டடா வளர்ச்சிக்கு பங்களித்துள்ளார். 17ம் நூற்றாண்டில் இத்தாலியில் வாழ்ந்த லுகி ரோஸி (1597-1653) மற்றும் பார்பரா ஸ்ஹோசி (1619-1677) போன்ற இசையமைப்பாளர்கள் மதசார்பற்ற கேன்டடவை உருவாக்கி மேற்கத்திய செவ்விசைக்கு பங்காற்றியுள்ளனர். ஜெர்மனியில் வாழ்ந்த ஹெயின்ரிச் சூட்ஸ்; 1585 - 1672 என்ற இசை வல்லுநர் புனித கேன்டட்hக்கள் வளர்ச்சியில் தன்னுடைய பங்களிப்பினை செய்துள்ளார். 17ஆம் நூற்றாண்டு மற்றும் 18-ம்; நூற்றாண்டு துவக்கத்தில் இத்தாலியில் அலெக்ஸாண்ட்ரோ கார்லட்டி (1660 — 1525) ஜெர்மனியில் டைடிரிக் பக்ஸ்ட் கியூடு (1637 - 1707) மற்றும் ஜோகன் செபஸ்டியன பாக் (1685 - 1750) போன்ற இசையமைப்பாளர்கள் கேண்;;டடா இசை வடிவங்களை படைத்துள்ளனர் இதில் பாக் லுத்ரன் ஆலயங்களுக்காக 200 கேன்னடடர்கள்; வேதாகம கருத்துக்களுடன் படைத்து கேன்டடா வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியுள்ளார். மேலும் ஜே.எஸ் பாக் அவர்கள் மதச்சார்பற்ற கேன்டடாக்;களையும் படைத்துள்ளார். குறிப்பாக காபி கேன்டடா, பீசன்ட் கேன்டடா ஆகியவை இதே காலகட்டத்தில் ஜார்ஜ் பிரடெரிக் ஹேண்டில் (1685 — 1759) என்ற இசை வல்லுநர் புனித மற்றும் மதச்சார்பற்ற கேன்டடாக்களை நல்கியுள்ளார்.

**பேஷன்**

பேஷன் என்பது இசை வடிவமானது இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள அளவற்ற அன்பினால் குறிப்பாக இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட பின்பு அவர் பட்ட பாடுகளை நினைத்து உருகி இசை அமைக்கப்பட்ட இசை வடிவம் ஆகும் இது மிகவும் பழமை வாய்ந்த

*புனித இசையமைப்பாக பல நூற்றாண்டுகளாக குறிப்பிடத்தக்க ஒன்றாக கருதப்பட்டு வருகிறது. முந்தைய பேஷன் இசை வடிவம் என்பது இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தை மையமாகக் கொண்டு கடைபிடிக்கப்படும் புனித வாரம் மற்றும் புனித வெள்ளியைச் சார்ந்தது ஆலயங்களில் சுவிஷேசமாக அறிவிக்கப்பட்டுள்ளது மேடிவல் காலங்களில் குறிப்பாக 9 ஆம் நூற்றாண்டுகளில் தனி பாடல்களாகவும் சிறிய குழு பாடல்களாகவும் மற்றும் ஒத்திசை குழு பாடல்களாகவும் வளர்ச்சி அடைந்துள்ளது 12ஆம் நூற்றாண்டுகளில் வழிபாட்டு நாடகங்களாகவும் இசையுடன் ஒருங்கிணைந்து பேஷன் இசை வடிவம் வளர்ச்சியை எட்டியுள்ளது.*

*ரினைசன்ஸ் காலகட்டங்களில் குறிப்பாக 15 ஆம்; நூற்றாண்டுகளில் பாலிபொனிக் இசை வடிவங்களில் இசை வல்லுநர்கள் பேஷன் இசை வடிவ உரைகளை பயன்படுத்தியுள்ளனர். பாரோக் காலகட்டங்களில் கிறிஸ்துவ மறுமலர்ச்சியாளர் மார்டின் லூதர் அவர்கள் கிறிஸ்துவ வழிபாட்டு பாடல்களை ஜெர்மானிய பேஷன் இசை வடிவமுடைய ஒத்திசைவு பாடல்களா வழங்கியுள்ளார். இக்காலகட்டத்தில் ஹெயின் ரிச் சூட்ஸ் என்ற இசை வல்லுநர் (1585-1672) குறிப்பிடப்படும் படியான பேஷன் இசை வடிவங்களை செயின்ட் மேத்யூ பேஷன் (1666) மற்றும் செயின்ட் ஜான் பேஷன் (1665) என ஒத்திசைவு பாடல்கள் வடிவில் இசையமைத்துள்ளார். இக்காலகட்டத்தில் மேற்கத்திய செவ்விசையின் முக்கியமான பேஷன் இசை வடிவ நபராக கருதப்படும் ஜோகன் ஜெபஸ்டியன் பாக் அவர்கள் (1685-1750) செயிண்ட் ஜான் பேஷன் (1724) மற்றும் செயின்ட் மேத்யூ பேஷன் என்ற முக்கியமான இசையமைப்புகளை பல்வேறு இசை நுணுக்கங்களுடன் உருவாக்கியுள்ளார். இவற்றில் குறிப்பாக கவுண்டர் பாயிண்ட், உணர்வுபூர்வமான ஒத்திசைவுகள் மற்றும் ஆழமான இறையியல் விளக்கங்களை காணலாம்.*

**காான்செர்ட்;டோ, சூட், சொனாட்டோ, பியூக் மற்றும் பரிலூட்:**

**காான்செர்ட்;டோ:-**

*கான்செர்ட்டோ இசை வகையானது மேற்கத்திய செவ்விசையில் மாறுகின்ற மற்றும் பல்துறை இசையாகும். இது தனி இசைக் கலைஞர்களுக்குள் இசைக்குழுவில் நிகழும் பண்புகளைக் கொண்டது பாரோக் காலகட்டம்; முதல் தற்காலம் வரை இதன் பரிணாம வளர்ச்சியென்பது பிரதிபலிக்கிறது. ரினைசன்ஸ்; காலகட்டத்தின் இறுதி மற்றும் பாரோக் காலகட்டத்தின் துவக்கம் கான்செர்டோ இசை வகையின் வேராக கருதப்படுகிறது. இக்காலகட்டத்தில் இசை வல்லுநர்கள் ஜியோவானி கேபிரியேல் இசையமைத்த சேக்ரி சிம்போனி'' (1597) என்ற ஒத்திசைவு பாடல் மற்றும் கருவியிசை முக்கியமானது. பாரோக் காலகட்டத்தில் இத்தாலிய இசை வல்லுநர்களின் கான்செர்டி குரோசி, ஒப்ரா.6'' 1714 ஆம் வெளியிடப்பட்டது. இதுபோல இசை வல்லுநர் ஆன்டொனியோ விவால்டியின் தி போர் சீசன்''; வயலின் கார்செர்டோஸ் மற்றும் ஜெர்மானிய இசை வல்லுநர் ஜோகன் செபஸ்டியன் பாக் இசையமைத்த சிக்கலான கவுன்;டர் பாயின்;ட் யுக்தியுடைய் ஒத்திசை பாடல்கள் மற்றும் கருவியிசை (ஹார்ப்சிகார்டு, வயலின், ஓப் பிரான்ட்பார்க் கான்செர்ட்டோஸ்) மிகவும் பிரபலமானவைகள். கிளாசிக்கல் காலகட்டத்தில் இசை வல்லுநர் ஜோசப் ஹைடன் இசை அமைத்த கருவியினை கார்செர்ட்டோஸ் (கீபோர்டு, செல்லோ, ட்ரம்பட், வயலின்) இசை வல்லுநர் வேர்ல்ப்கேங் அமேடியஸ் மொசார்ட் இசையமைத்த 27 பியானோ கான்செர்ட்டோஸ் மற்றும் இசை வல்லுநர் லுட்விங் வான் பீத்தோவன் இசை அமைத்த 5 பியானோ கான்செர்டோர்ஸ் (எம்பரர் கான்செர்டோர்ஸ்) மற்றும் வயலின் கான்செர்டோர்ஸ் புதிய இசை நுணுக்கங்களுடன் பிரபலமானவைகளாகும்.*

**சொனாட்டா:**

சொனாட்டா இசை வடிவமானது மிகவும் முக்கியமான, மேற்கத்திய செவ்விசையை தாங்கி பிடிக்கும் இசை வடிவமாக திகழ்ந்து வருகிறது. இது உயரிய வரலாற்று பின்னியுடையது. பாரோக் காலகட்டத்தில் கருவியிசையின் மூலைக் கல்லாக கருதப்படுகிறது மட்டுமல்லாமல் கிளாசிக்கல் மற்றும் ரொமான்டிக் கால கட்டங்களில் சிறந்து விளங்கியது. சொனாட்டா என்ற இத்தாலிய சொல்லாடல் கேன்டட்டா என்ற சொல்லுக்கு எதி;ர்பதமாக பயன்படுத்தப்பட்டள்ளது. சொனாட்டா எனப்படுவது கருவியிசையமைப்பை மையமாக்க கொண்டது. மாறாக கேன்டட்டா எனப்படுவது குரலிசையமைப்பை மையமாகக் கொண்டது. துவக்க பாரோக் கால சொனாட்டா எளிதான தன்மையுடன் காணப்பட்டது. சில மாறுபட்ட இயக்கங்களை கொண்டது. ஜியோவானி கேபிரியேல் என்ற வெனடியன் இசை வல்லுநர் சொனாட்டா என்ற சொல்லாடலை பயன்படுத்தியுள்ளார். குறிப்பாக 1597 ல் சொனாட்டா பியான் “இ போர்டோ” என்ற இசைக் கருவி இசைக்குழு வடிவ இசையமைப்பை உருவாக்கியுள்ளார். துவக்க காலத்தில் சர்ச் சொனாட்டா(*sonate da chiesa*) மற்றும் சேம்பர் சொனாட்டா (*Sonata da camera*) என்ற வடிவில் சொனாட்டா இசையமைக்கப்பட்டள்ளது. ஆர்கன் ஜியோ என்ற இத்தாலிய இசை வல்லுநர் சொனாட்டா கருவியிசை வடிவத்தை ஐரோப்பிய முழுவதில் பிரபலப்படுத்தியதில் முக்கிய பங்கு வகிக்கிறார். இவர் இசையமைத்த வயலின் சொனாட்டாக்கள் மிகவும் பிரபலமானவை குறிப்பாக “சொனாட்டே டா சீசா, ஓப்.3” மற்றும் “சொனாட்டே டா கேமிரா, ஓப்.2” போன்ற சொனாட்டாக்கள் கொரோலிக்கு பின்னர் வந்த இசை வல்லுநர்களுக்கு எடுத்துக்காட்டாய் அமைந்தன. கிளாசிக்கல் காலகட்டத்தில் மிகவும் குறிப்பீடும்படியான வளர்;ச்சியை சொனாட்டா இசை வடிவம் அடைந்தது. குறிப்பாக கோடிபிக்கேஷன் எனப்படுகின்ற குறியிடுதல் முறை சொனாட்டா இசை வடிவத்தில் முக்கிய பங்கை பெற்றது. இதில் மூன்று முக்கிய பிரிவுகளுடன் சொனாட்டா இசை உருவாக்கப்பட்டுள்ளது. அதாவது எக்ஸ்கோ (*exposition*- வெளிப்பாடு), டெவலப்மென்ட் (*Development*--வளர்ச்சியடைதல்) மற்றும் ரிகேப்சுவலேசன் (*recapitualation* -மறுபரிசீலனை) போன்ற இசை நுட்பங்களாகும். இக்கால கட்டத்தில் பிரான்ஸ் ஜோசப் ஹைடன், மொசார்ட், பித்தோவன் போன்றோர் உருவாக்கிய பியானோ சேம்பர் மற்றும் வயலின் செனாட்டாக்கள் புதுப்புது இசை நுணுக்கங்களுடன் உலகெங்கிலும் பிரபலமானவைகளாகும்.

**பியூக்:**

மேற்கத்திய செவ்விசையில் பியூக் இசைவடிவம் நம் மதிப்பை பெற்ற மிகவும் சிக்கலான இசை வடிவமாக கருதப்படுகிறது. இவ்விசை வடிவம் முரண்பாடான (*counter punctal*) எதிர்முறை (*counter point*) ஒத்திசைவு இசை நுணுக்கத்துடன் உருவாக்கப்பட்டுள்ளது. பாரோக் காலகட்டத்தில் இவ்விசை வடிவம் பிரபலமானது. இவ்விசை வடிவத்தின் வேரானது ரினைசன்ஸ் காலகட்டத்திலேயே துவங்கியுள்ளது. இக்காலகட்ட இசை வல்லுநர்களான ஜ*h*ஸ்குயின்டெஸ் பிரஸ் மற்றும் பாலஸ்டிரினா போன்றோரின் பாலிபொனிக் இசை வடிவத்தில் காணலாம், மேலும் துவக்க கால இசை வல்லுநர்களான கிரோலாமோ பிரஸ் கோபால்டி மற்றும் ஜோகன ஜேக்கப் பிறோபெர்கள் போன்றோரின் இசையமைப்புகளில் இவ்விசை வடிவத்தை காண இயலும். பாரோக் காலகட்டத்தில் இவ்விசை வடிவம் ஒரு தனிப்பட்ட இசை வடிவமாக வளர்;ச்சி அடைந்துள்ளது. இது கீபோர்டு இசைக்கென குறிப்பாக ஆர்கன் இசைக்கென உருவாக்கப்பட்ட இசை வடிவம். பியூக் இசையினை டிடிரிச் பக்ஸ்ட்கட் மற்றும் ஜே.எஸ் பாக் போன்ற ஜெர்மானிய இசை வல்லுநர்கள் மேம்படுத்தினர், ஜே.எஸ் பாக்ன் காலம் பியூக் இசை வடிவத்தின் பொற்காலமாக கருதப்படுகிறது. பாக் அவர்கள் “ஆர்ட் ஆப் பியூக்” என்ற பியூக்

மற்றும் கேனான் இசை தொகுப்பை வெளியிட்டுள்ளார். பியூக் இசை வடிவமானது அதன கவுன்டர் பாயின்ட், தெளிவான அமைப்பு, ஆழமான உணர்வு, கலைத்தன்மையுடைய உணர்வுகள் போன்ற நுணுக்கங்களுடன் சிறந்து விளக்கியது. பியூக் இசை வடிவில் எக்ஸ்போசிசன், வெடலப்மெண்ட் மற்றும் ரிகே;பபிச்சுலேசன் என்ற மூன்று முக்கிய பிரிவுகளுடன் கூடிய இசை வடிவாகும் என்பது போன்ற தகவல்களை இசை வரலாற்று மற்றும் ஆய்வு நூல்களை ஆய்வு செய்து பொழுது நன்கு அறிய முடிந்தது.

**கிளாசிக்கல் கால இசை வடிவங்கள்**

மேற்கத்திய செவ்விசையில் கிளாசிக்கல் காலம் எனப்படுவது ஏறத்தாழ கிபி 1750 முதல் 1820 வரை உள்ள காலமாகும். இக்காலகட்டத்தில் இசையானது தெளிவுடனும் நல்அமைப்பு மற்றும் நிலைப்பு தன்மையுடனும் காணப்பட்டது என இசை வரலாற்று ஆய்வுகள் தெளிவாக உணர்த்தின. இக்காலகட்டத்தில் சில இசை வடிவங்கள் அதன் உயரிய தன்மையுடன் வளர்ச்சியடைந்தன. இவை இக்காலகட்டத்தில் மேற்கத்திய சேவை செவ்விசையின்; மைய புள்ளியாக கருதப்படுகின்றன. கிளாசிக்கல் கால் இசை வடிவங்கள் எனப்படுபவை 1. சிம்பொனி, 2. சொனாட்டா, 3.ஸ்டிரிங் குவார்டெட் 4. கார்செட்டோ 5. ஒப்ரா 6. ரோன்டோ 7. தீம் மற்றும் வேறுபாடுகள் 8. மினிட், டிரியோஃசர்சோ மற்றும் டிரியோ 9. செரினேட் மற்றும் டைவர்டிமென்டோ 10. மாஸ் மற்றும் புனித இசை என்பவையாகும்.

**சிம்பொனி**

சிம்பொனி இசை வடிவம் மிகவும் முக்கியமான மேற்கத்திய செவ்விசையை தாங்கும் இசை வடிவமாக 18-ம் நூற்றாண்டு நூற்றாண்டில் முழுவதுமாக கிளாசிக்கல் காலகட்டத்தில் வளர்ச்சி அடைந்துள்ளது. சிம்பொனியின் வேரானது இத்தாலியின் ஒப்ரா ஓவர்சர் எனப்படும் சிம்பொனியை துவக்கமாக கொண்டுள்ளது. பதினெட்டாம் நூற்றாண்டின் துவக்க கால ஒப்ரா எனப்படும் சிம்போனியா துவக்க ; கருவியிசையுடன் வேதம் மெதுவாக வேகம் போன்ற மூன்று பிரிவுகளைக் கொண்டது. இவ்வகையான ஓவர்சர்கள் ஒப்ராக்களில் இருந்து தனித்து இசைக்குழு கருவி இசையுடன் தனித்தன்மை பெற்றது. அலெக்ஸாண்ட்ரோ என்ற இசை வல்லுநர் ஸ்கார்லெட்;டி மூன்று பகுதிகளுடைய சிம்போனி வடிவிலான இசை அமைப்புகளை உருவாக்கியுள்ளார். 18 ஆம் நூற்றாண்டில் இத்தாலியில் (மிலன்), ஜியோவானி பாட்டிஸ்டா சம்மாடினி மற்றும் ஜெர்மனியின் கார் பிலிப் இமானுவேல் பாக் போன்ற இசை வல்லுநர்கள் ஒப்ரா ஓவர்சர்ஸ்சை மையமாக கொண்ட கருவியிசை சிம்பொனிகளை மூன்று இயக்கங்களிலிருந்து சிக்கலான வடிவங்களாக உருவாக்கியுள்ளனர். சம்மாடினி அவர்கள் முதல் கிளாசிக்கல் கால சிம்பொனி இசை வடிவ இசையமைப்பாளராக போற்றப்படுகிறார். கிளாசிக்கல் காலகட்டத்தில் ஜெர்மனியின் மான்கெய்ம் எனும் பகுதியில் அமைந்துள்ள ‘‘தி மான்கெய்ம் ;பள்ளியை மையமாகக் கொண்டு இசைக்கலைஞர்கள் குழு மற்றும் இசையமைப்பாளர்கள், இசை வல்லுநர் ஜோகன் ஸ்டாமிக்ஸ் அவர்கள் வழி நடத்துதலுடன் சிம்பொனி இசை வடிவத்தின் அமைப்பு மற்றும் கருவி இசைக் குழுவினை விரிவுபடுத்தினார். மான் கெயின் ‘‘கிரசன்ட்டோ’’; என்ற சத்தத்தை படிப்படியாக உயர்த்தும் புது நுட்பத்தை அறிமுகப்படுத்தினார். மேலும் மான்கெய்ம்; பள்ளி சிம்பொனியின் நான்கு இயக்கங்களான வேகம் (ஃபாஸ்ட்) மெதுவாக (ஸ்லோ) நடனம் (டான்ஸ் லைக்) மற்றும் வேகம் போன்றவற்றை நிறுவினார். இசை வல்லுநர் ஜோசப் ஹைடன் அவர்கள் சிம்பொனியின் தந்தை என அழைக்கப்படுகிறார் என்னவென்றால் அவர் 100 சிம்பொனி இசையமைப்புகளை உருவாக்கி மேற்கத்திய செவ்விசையில் இவிசை வடிவத்திற்கு குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளார். ஹைடன் அவர்கள் சிம்பொனி இசையின் தெளிவான சுத்திகரிப்பு, உணர்வு எல்லைகளை வெளிப்படுத்துதல,; அதிநவீன தன்மை போன்றவற்றை செய்துள்ளார். இவர் எஸ்தர்கஸி குடும்ப

அரசபை இசையமைப்பாளராக பணியாற்றியுள்ளார். ஹைடனின் சிம்பொனி இசையமைப்புகள் சாதாரண மூன்று இயக்க அமைப்புகளில் இருந்து மிகவும் சிக்கலான சமச்சீரான நான்கு இயக்க அமைப்புடன் விளங்குகின்றன. இவரின் லண்டன் சிம்போனிகள் (எண் 93-104) முழு தன்மையுடைய கிளாசிக்கல் கால மிகவும் வெற்றியடைந்த ஹைடன் சிம்போனிகளாக கருதப்படுகின்றன. இசை வல்லுநர் மொசாட் சிம்போனிகளை முன்னேறிய நளினத்தன்மை, இராக அழகு மற்றும் ஆழமான உணர்வுகளுடன் இசையமைத்துள்ளார். இவரின் சிம்போனி எண் 40 (Gminor) மற்றும் சிம்பொனி எண் 41(major -ஜுபிடர்) போன்றவை மிகவும் தலைச்சிறந்த படைப்புகளாகும்;;. இசை வல்லுநர் பீத்தோவன் சிம்பொனி இசையில் புரட்சியை ஏற்படுத்தி கிளாசிக்கல் காலத்திற்கும்; ரொமான்டிக் காலத்திற்கும் இடையேயான எல்லையில் நல்லதொரு பாதையை ஏற்படுத்தினார். அவரின் ஒன்பது சிம்போனிக்களில் ஸ்வர அளவுகோலை விரிவுபடுத்தி, சிக்கலானம தன்மையுடன் மற்றும் உணர்வுபூர்வமான வெளிப்பாடுகளை காணலாம.; சிம்போனி எண் 3 (-Etlat எறோயிகா), சிம்பொனி எண் 9 (கோரல் சிம்பொனி போன்றவற்றில் நாடகத் தன்மை, நீளமான கருத்து, செறிவு வளர்ச்சி போன்றவை நிறைந்து காணப்படுகின்றன. சிம்போனி எண்9 இறுதி இயக்கத்தில் தனி குரல் இசை மற்றும் ஒத்திசைவு குரல் இசையை அறிமுகம் செய்து பீத் தோவன் அவர்கள் எதிர்கால இசையமைப்பாளர்களுக்கு முன்னோடியாக திகழ்கிறார்.

**ஸ்டிரிங் குவாட்டர்**

மேற்கத்திய செவ்விசையில் ஸ்டிரிங் குவார்டெர் மிகவும் முக்கியமான அறை இசை(chambev music)) வடிவமாக கருதப்படுகிறது. இதில் இரண்டு வயலின், ஒரு வயலோ மற்றும் ஒரு செல்லோ என நரம்பு விசை கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன இவ்விசை வடிவம் உயர்ந்த வரலாற்று பின்னணியுடன் கிளாசிக்கல் காலகட்டத்தில் மிகவும் பிரபலமடைந்தது. 16 17 ஆம் நூற்றாண்டுகளில் இவ்விசை வடிவம் வளர்ச்சி அடைந்து ஸ்டிரிங் குவார்டெட், பாரோக் டிரியோ சொனாட்டாவிலிருந்து பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளதை ஆய்வுகள் வாயிலாக அறிய முடிந்தது. துவக்க கிளாசிக்கல் காலத்தில் இசை வல்லுநர் ஜியோ வானி பாட்டிஸ்டா சம்மார்டினி மற்றும் லுகி போச்செரி போன்றோர் தங்களுடைய ஸ்டிரிங் குவாட்டர் குவார்டெட் இசையமைப்புகளை சமூக கூடுகைகளில் நிகழ்த்தியுள்ளனர். இசை வல்லுநர் ஜோசப் ஹைடன் ஸ்டிரிங் குவாட்டெட் இசையின் தந்தை என போற்றப்படுகிறார். இவரின் ஓப்ஸ் 20 (1772)-சன் குவார்டெட் இசையில் டைவர்டி;மென்ட் முறையை புகுத்தியது ஒரு மயில் கல்லாக பார்க்கப்படுகிறது. இதில் வேகம் மெதுவாக தாளத்நடை வேகம் என்ற நான்கு இயக்கங்களை பயன்படுத்தி உள்ளார். இசை வல்லுநர் மொசாட் ஹைடன் ஸ்டிரிங் குவார்டெட்ஸ் உத்வேகம் அடைந்தது ''ஹைடன் குவார்டெட்'' 1782 1785 என்ற இசை அமைப்பை உருவாக்கியுள்ளார். இதில் கவித்துவ முறை, உணர்வுபூர்வமான வெளிப்பாடுகள், எதிர்முனை ஒத்திசை போன்ற நுட்பங்களை கையாண்டுயுள்ளார். இவரின் ஸ்டிரிங் குவார்டெட் எண் 19c பீத்தோவன மேஜர் (டிசொனஸ்), k.465 என்ற இசை வடிவமும் இத்தகைய நுட்பங்களை கொண்டுள்ளது. இசை வல்லுநர் சிறந்த ஸ்ட்ரீங் குவார்டெட் இசை வடிவத்தில் இசை அமைத்துள்ளார். அதில் 16 குவார்டெட்ஸ் (sp.18) (sp.59) மைய மற்றும் கடைசி குவார்டெட் என துவக்க பிரிக்கப்பட்டுள்ளன. இவை உணர்வு வெளிப்பாடுகள், நாடக உறுப்புகள், சிக்கலான எதிர்முனை ஒத்திசைவு, ஆன்மீகத் தன்மை புது அமைப்பு போன்ற நுட்பங்களுடன் சிறந்த விளங்குகின்றன. ரொமான்டிக் காலகட்டத்தில் இசை வல்லுனர் பிரான்ஸ் சூபர்ட் பல குவார்டெட்டை உருவாக்கியுள்ளார். அதில் ''டெத் அண்டு தி மெய் டன்''D.810; மற்றும் ''ரோசமுண்டே D.864 போன்ற குவார்;டெட் போன்றவை கவித்துவம், ஒத்திசைவு அமைப்பு மற்றும் உணர்வுகளை வெளிப்படுத்துமாறு அமைந்துள்ளன.

**ரொமான்டிக் கால இசை வடிவங்கள்**

*மேற்கத்திய செவ்விசை வரலாற்றில் ரொமான்டிக் காலம் எனப்படுவது கிபி 1820 முதல் 1900 வரையுள்ள காலமாகும். இக்காலகட்டத்தில் நல்ல உணர்வு வெளிப்பாடுகள், தனித்தன்மைகள் மற்றும் நாடக பங்குடைய இசை வடிவங்கள் தோன்றின. இசை வல்லுநர்கள் பழைய இசை அமைப்புகளை விரிவுபடுத்தி புது நுணுக்கங்களை தங்கள் இசையமைப்பில் பயன்படுத்தினர். இக்காலகட்டத்தில் 1)சிம்போனி 2)சிம்போனிக் போயம் ;டோன் போயம் 3)ஆர்ட் சாங் (லையட்) 4)சாங் சர்க்கிள் 5)ஒப்ரா 6)கேரக்டர் பீஸ் 7)ஈ டி யூடு 8)நோக்டிரின் 9)மசுர்கா, போலானைஸ் மற்றும் வாட்ஸ்;; 10)கான்செர்;டோ 11)புரோகிராம் சிம்போனி 12)பாலட் 13)ரிக்குயிம் மாஸ் 14)சிம்போனிக் வேரியேஷன்ஸ்; போன்ற இசை வடிவங்கள் வளர்ச்சியடைந்தும், தோன்றியும் மேற்கத்திய செவிசையை செறிவுபடுத்தின என்பதை இசை ஆய்வுகள் வாயிலாக அறிய முடிந்தது. இதில் குறிப்பான சில இசை வடிவங்களை பற்றி விரிவாக காணலாம்.*

**நோக்டிரின்**

*நோக்டிரின் இசை வடிவமானது தனி பியானோ இசைக்கென உருவாக்கப்பட்ட இசை வடிவமாகும.; ரொமான்டிக் காலகட்டமான நூற்றாண்டில் பரவலாக பிரபலமடைந்த இசை வடிவம் இசை வல்லுனர் பிரடெரிக் பைன் இவ்விசை வடிவத்தில் சிறந்து விளங்கினர். நோக்டிரின் என்னும் சொல்லானது நேக்டர்னஸ்; எனும் லத்தீன் மொழியிலிருந்து உருவானது. நோட்டரி என்றால் இரவை குறிக்கும் இவ்விசை வடிவம் அதிகமாக இரவுகளில் நிகழ்த்தப்பட்டுள்ளது. துவக்க கால நோக்டிரின் இசை வடிவம் எளிதாக காணப்பட்டது. கிளாசிக்கல் காலகட்டத்தில் பல இயக்கங்களில் இசையமைக்கப்பட்டது. இசை வல்லுநர் ஜாண் பீல்ட் (1782-1837) இவ்விசை வடிவத்தின் முன்னோடியாக கருதப்படுகிறார். இவர் இசை வல்லுநர் மியூசியோ கிளமென்டியின் மாணவர் ஆவார். குறுகிய மற்றும் கவித்துவமான பியானோ நோக்டிரின் இசை வடிவத்தை இவர் உருவாக்கியுள்ளார். ரொமான்டிக் காலகட்டத்தில்; இசை வல்லுநர் பிரடெரிக் சொபைன் 21 நொக்டிரின் இசை வடிவத்தை 1827 மற்றும் 1849 காலகட்டத்தில் இசையமைத்துயுள்ளார். இவர் நொக்டிரின் இசை வடிவத்தின் ஆசானாக போற்றப்படுகிறார்.*

**பாலட்**

*ரொமான்டிக் காலகட்டத்தில் பாலட் இசை வடிவம் கருவியிசைக்கென உருவாக்கப்பட்ட எண்ணங்களை வெளிப்படுத்துகிற இசை வடிவம் ஆகும். இது கவித்துவமான குரல் இசை வடிவிலிருந்து கலைநயமிக்க பியானோ இசையமைப்பிற்கு மாறிய இசை வடிவம் இதில் இசை வல்லுநர் சொபைன் மற்றும் பிரான்ஸ் சிறந்து விளங்கினர். இவ்விசை வடிவத்தின் வேரானது 14, 15 ஆம் நூற்றாண்டு மேடிவல் மற்றும் ரினைசன்ஸ் காலத்திலேயே பிரான்சில் கவித்துவமான இசை வடிவமாக இருந்துள்ளது. அக்காலகட்டத்தில் கிலாமே டி மாசெட் இவ்விசையில் சிறந்து விளங்கியுள்ளார்.*

*ரினைசன்ஸ் மற்றும் பாரோக் காலகட்டத்தில் இவ்விசை வடிவம் குரலிசையாகவும் கருவிசையாகவும் இருந்துள்ளது. 19ஆம் நூற்றாண்டு ரொமான்டிக் காலகட்டத்தில் இசை வல்லுநர் சொபைன் கவித்துவ கருத்து, நாடகத்தன்மை, சிக்கலான அமைப்புடைய, உணர்வுகளை வெளிப்படுத்தும் விதத்திலான, பாலெட் இசை வடிவத்தில் இசையமைத்துள்ளார். பின்னர் இசை வல்லுநர் ஜோதன்னஸ் பிரான்ஸ், பிரான்ஸ் லிஸ்ட,; கேப்ரியல் கிளாடி டிபுசி மற்றும் எர்வாட் கிரிக் போன்றோர் தங்களுடைய தேசிய இசை உறுப்புக்களுடன் இவ்விசை வடிவத்தில் இசையமைத்துள்ளனர்.*

**நவீன கால இசை வடிவங்கள்**

மேற்கத்திய செவ்விசையில் நவீன காலம் எனப்படுவது 19ஆம் நூற்றாண்டின் இறுதி காலம் முதல் தற்காலம் வரை உள்ளடக்கியது. இக்காலகட்டத்தில் இசை வல்லுநர்கள் பாரம்பரிய இசை வடிவங்கள் மற்றும் ஓசை முறைகளின் பண்புகளை இணைத்து குறிப்பிட்ட பரிசோதனைகளை இசையில் நிகழ்த்தியுள்ளனர். புதிய தாளநடை, இயக்கங்கள் மற்றும் பலவித தோற்றங்கள் இக்கால கட்டத்தில் தோன்றின. இக்காலத்தில் தோன்றிய இசை வடிவங்களான இம்பிரிசனிசம், எக்ஸபிரிசனிசம், நியோ கிளாஸ்சிசம், சீரியலிசம், டொல் டோன்; டெக்னிக் (டோப்கேபொனி) மினிமலிசம், ஸ்பெக்ட்ரல் மியூசிக் எலியடொரிக் மற்றும் சேன்ஸ் மியூசிக், எலக்ட்ரானிக் மற்றும் எலக்ட்றோ அக்கஸ்டிக் மியூசிக், போஸ்ட் மாடனிசம், எக்ஸ்டென்டெட் டெக்னிக் மற்றும் அவந்த்-கிரேடு அப்றோச்சல் போன்றவை பிரபலமடைந்தன என்பதை இசை ஆய்வு நூல்கள் மற்றும் வரலாற்று நூல்களை; ஆய்வு செய்த பொழுது நன்கு அறிய முடிகிறது.

**இம்பிரிசனிசம்**

மேற்கத்திய செவ்விசையில் இவ்விசை முறை 19ஆம் நூற்றாண்டின் இறுதி மற்றும் இருபதாம் நூற்றாண்டில் பிரான்சிலிருந்து பரவியது. இவ்விசை வடிவம் மனநிலை, சூழல,; வெளிப்படையான கதை மற்றும் உணர்வு போன்ற பண்புகளை வெளிப்படுத்தும் விதமாக காணப்படுகின்றன. இச்சொல்லாடல் முதலில் காட்சி ஓவியங்களுக்கு பயன்படுத்தப்பட்டன. இவ்விசை வடிவ இயக்கத்தில் இசை வல்லுநர்கள் கிளாடி டிபுசி மற்றும் மாரிஸ் ராவல் போன்றோர் சிறந்து விளங்கினர். சனிசம் இசை வடிவமானது புதிய உத்திசை, மேற்கத்திய ஸ்வர எல்லை அல்லாது, குழு கருவி இசை, ஒலிப்பண்பு மற்றும் தாள நெகிழ்வு தன்மையுடன் காணப்படுகிறது. மேலும் தன்னிச்சையான மற்றும் இயற்கைத் தன்மையுடைய இசையை உருவாக்கும் பாங்கில் உள்ளது. இசை வல்லுநர் கிலாடி டி புசி (1862-1918) இவ்விசை வடிவத்தின் தந்தையாக கருதப்படுகிறார். இசை வல்லுநர் மாரிஸ் ராவல் (1875-1937) இவ்விசை வடிவத்தின் முக்கிய நபராவார்.

**எக்ஸ்பிரிசனிசம்**

எக்ஸ்பிரிசனிசம் இசை முறையானது 20 ஆம் நூற்றாண்டில் வெளிப்பட்ட ஒன்றாகும். இவ்விசை முறை ஜெர்மனி மற்றும் ஆதிரியா மையமாகக் கொண்டு முதலில் துவங்கியது. இவ்விசை இயக்க முறையில் இசை வல்லுநர் அர்னால்டு சோகன்பெர்க் மற்றும் ஆல்ஃபன் பெர்க் மற்றும் ஆண்டன் விபர்ன் போன்றோர் முன்னோடிகளாக ஏடோன்ஸ் (பன்முறையற்ற) மற்றும் டொல் டோன் மெத்தேட் (பன்னிரண்டாம் தொனி முறை) போன்ற நுணுக்கங்களை கையாண்டுள்ளனர். இவ்விசை இயக்கம் ஐரோப்பாவில் இரண்டாம் உலகப் போருக்கு பின்னர் எழுச்சியை ஏற்படுத்தியது. ஓவியர்கள் எட்வர்ட் முஞ்ச், வாசிலி கேன்டின்கி மற்றும் ஈகன்சீல்; போன்றோரின்; காட்சி கலைகளுடன் இவ்விசை முறை தொடர்புடையது. எக்ஸ்பிறசனிசம் இசை முறையில் பாரம்பரிய பண்ணற்ற முறை, பனிரெண்டு தொனி நுணுக்கம், (சீரியலிசம், துண்டாடுதல், உரையாடும் தன்மை, மனரீதியான மற்றும் உணர்வுபூர்வ கருத்துக்கள் போன்ற நுணுக்கங்கள் மிகுதியாக காணப்படுகின்றன. இசை வல்லுநர் அர்ணால்டு சோகன் பெர்க் (1874-1951) இவ்விசை முறையில் தந்தையாக போற்றப்படுகிறார். இவர் இசையமைத்த எர்வார்துவ் (1909) பிரோட் லுனையர் (1912) போன்றவற்றில் தனி குறளிசைக்கு தனி நாடக பாங்கடனும், முழு கருதியிசையுடன் இவ்விசை முறை காணப்படுகின்றது.

**நீயோ கிளாசிக்சிசம்**

20-ஆம் நூற்றாண்டு துவக்க காலகட்டத்தில் வெளிப்பட்ட தெளிவான, ஒழுங்குப்படுத்தப்பட்ட சமநிலையுடைய கிளாசிக்கல் காலகட்ட இசை வல்லுநர்களான ஹைடன,; மோசாட் மற்றும்

பீத்தோவன் ஆகியோரின் இசையமைப்புகளின்; பண்புகளை கொண்ட இசைமுறை இயக்கம் நியோகிளாசிக்சிசம் ஆகும். இது துவக்க நவீன இசை முறையான எக்ஸ்பிசனிசம் போன்றது. 1920 ஆம் நூற்றாண்டு இசை வல்லுநர்கள் வேக்னர், மெக்லர் மற்ஸ்றாஸ் போன்றோரின் இசையமைப்புகளின் தாக்கம் இவ்விசை முறைகளில் காணப்படுகிறது. இவ்விசைமுறையில் இசை வல்லுநர் ஸட்றாவின்கி; மற்றும் செர்கிபுரோ கோபியின் முரண்பாடு, பாரம்பரிய மற்ற ஸ்வர எல்லை மற்றும் புதிய தாளநடை போன்ற நவீன நுணுக்கங்களை காணலாம்.

**சீரியலிசம்-டொல்டோன் டெக்னிக்**

20-ம்; நூற்றாண்டில் இரண்டாம் உலகப் போருக்குப்;பின் சீரியலிசம் இசையமைப்பு முறை மிகவும் முக்கியமான ஒன்றாக பார்க்கப்படுகிறது. 19 ஆம் ஆண்டில் ஆஸ்திரியன் இசை வல்லுநர் அர்னால்ட் சோகன் பெர்க் பனிரெண்டு தொனி; இதர இசை உறுப்புகளான தாளம், உணர்வு வெளிப்பாடுகள,; மற்றும் ஒலி பண்புகளுடன் இவ்விசை முறையினை அறிமுகப்படுத்தியுள்ளார். சோகன் பெர்கன்; மாணவர்களான வியன்னா பள்ளியினுடைய ஆலான் பெர்க் மற்றும் ஆண்டன் விபெர்ன் போன்ற இசை வல்லுநர்கள் பனிரெண்டு தொனி நுணுக்கத்துடன் இசையமைத்துள்ளனர். இரண்டாம் உலகப் போருக்கு பின்னர் இசை வல்லுநர்கள் பையர் பௌலெஸ் மற்றும் கார் nஉறயின் ஸ்டோக்கியூசன் போன்றோர் தாளநடை, உணர்வு வெளிப்பாடுகள், உச்சரிப்பு தன்மை, குரல் பண்புடன், இன்டிகிரல் சீரியலிசம் மற்றும் போன்ற அணுகுமுறைகளை இவ்விசை முறையில் செய்துள்ளனர்.

**முடிவுரை:**

மேற்கத்திய செவ்விசையென்பது பண்டைய காலம், பைபிள் காலம், என மிகப் பழமையான காலம் தொடங்கி மேடிவாள் காலம், ரினைசன்ஸ் காலம், பாரோக் காலம், கிளாசிக்கல் காலம் ரொமான்டிக் காலம் மற்றும் நவீன காலம் வரை பல்வேறு பரிணாம வளர்;ச்சியடைந்து. உலகெங்கும் மக்கள் பயன்படுத்தும் இசையாக பிரபலமடைந்துள்ளது. இதில் மேடிவாள் காலம், ரினைசன்ஸ் காலம், பாரோக் காலம், கிளாசிக்கல் காலம், ரொமான்டிக் காலம் மற்றும் நவீன கால கட்டங்களில் இசை வல்லுநர்களால் உருவாக்கப்பட்ட இசை வடிவங்கள் தற்போதும் பயன்படுத்தப்பட்டு அச்சடிக்கப்பட்ட இசைப்பெட்டகங்களாக இருந்து வருகின்றன. மேற்கத்திய செவ்விசையின் இப்பயன்பாட்டு முறையே இவ்விசை உலகெங்கும் பிரபலமான இசையாக இருந்து வருகிறது. ஒவ்வொரு காலகட்டங்களிலும் மேற்கத்திய செவ்விசை வடிவங்களில் புதுப்புது யுக்திகளும், நுணுக்கங்களும் கையாளப்பட்டள்ளதை இவ்விசை வடிவங்களை பயன்படுத்தும் போது மிகவும் துல்லியமாக அறிய முடிந்தது. மேலும் இசை வரலாறு மற்றும் ஆய்வு நூல்களும் இவை பற்றிய தகவல்களை தெளிவாக கூறுகின்றன.

**துணை நூற்பட்டியல்:**


1. தி ஆக்;ஸ்போர்டு கம்பேனியன் டு மியூசிக் - ஆலிசன் லேதம்.

2. தி ஆக்ஸ்போர்டு ஹிஸ்டறி ஆப் வெஸ்டர்ன் மியூசிக் தொகுதி 1,2,3,4ரூ5 - ரிச்சர்டு தருஸ்கின்.

3. ஆக்ஸ்போர்டு டிக்ஸ்னறி ஆப் மியூசிக் - மைக்கேல், ஜாய்ஸ் கென்னடி, டிம் ரூதர்போர்டு — ஜான்சன்.

4. கேம்பிரிட்ஜ் ஏ டிக்ஸ்னறி தொகுதி மியூசிக் அயண்டு மியூசிசியன் தொகுதி 1,2,3,4ரூ5 - தொகுத்தது ஜார்ஜ் குரோவ்

5. தி கேம்பிரிட்ஜ் ஹிஸ்டறி ஆப் வெஸ்டர்ன் மியுசிக் தியறி — தொகுத்தது தாமஸ் கிறிஸ்டன்சன்

6. கேம்பிரிட்ஜ் ஏ கான்சைஸ் ஹிஸ்டறி ஆப் வெஸ்டர்ன் மியூசிக் - பால் கிரிபித்ஸ்

7. தி ஹாவார்டு டிஸ்னறி ஆப் மியூசிக் - டான் மைக்கேல் ரேன்டல் நார்டன்.

8. நார்டன் ஏ ஹிஸ்டறி ஆப் வெஸ்டர்ன் மியூசிக் - பர்க்ஹோல்டர், கிறைவுட் ரூ பலிஸ்கா.

9. கோலிங்ஸ் ஹிஸ்டறி ஆப் வெஸ்டர்ன் மியூசிக் - ஹக் எம்.மில்லர் ரூ டேல் கோக்றெல்.

10. ஹிஸ்டறி ஆப் தி மாடர்ன் மியூசிக் ஆப் வெஸ்டர்ன் யூரோப் - ஆர் - ஜி. கீஸ்வெட்டர், ராபர்ட் முல்லர்.

***Reference:***

1. *The Oxford Companion to Music — Alison Latham*

2. *The Oxford History of Western Music Volume 1,2,3,4&5 — Richard Taruskin*

3. *Oxford Dictionary of Music — Michael, Joyce Kennedy & Tim Rutherford-Johnson.*

4. *Cambridge A Dictionary of Music and Musicians Volumes 1,2,3,4&5 — Edited by George Grove.*

5. *The Cambridge history of Western Music Theory — Edited by Thoman Christensen.*

6. *Cambridge A concise history of Western Music — Paul Griffiths.*

7. *The Harvard Dictionary of Music — Don Michael Randel.*

8. *Norton A history of Western Music — Burkholder, Grout and Palisca*

9. *Collin's History of Western Music — Hugh M. Miller & Dale Cockrell.*

10. *History of the Modern Music of Western Europe- R.G. Kiesewetter & Robert Muller.*

ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2024, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜனவரி இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com